# WORD OF CHRIST

## கிறிஸ்துவின் வசனம்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3 : 16

ஆசிரியர்
**B. அர்ச்சுணன்**

மரம் 6 டிசம்பர் 1997 கனி 5

வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையின் 10ஆம் வருட நிறைவு ஸ்தோத்திர கூட்டம் 31-12-97

## ஆசிரியர் கடிதம்

உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தூய நாமத்தில் வாழ்த்துக்கள்,

இக்கடிதத்தின் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி யடைகிறேன். பத்திரிக்கையை கருத்துடன் வாசித்து பயன் அடைவீர்களென நம்புகிறேன். கிறிஸ்துவின் உபதேசத்தை கூட்டாமலும், குறைக்காமலும் வெளியிடுவதே எமது தலையாய பணியாகும். மாதந்தோறும் வெளிவரும் வேத அறிவுப்போட்டியில் வாசகர் அனைவரும் கலந்துகொண்டு பயனடைய வாஞ்சிக்கிறோம். இவ்விதழ் மூலம் நீங்கள் கற்றுக் கொண்ட சத்தியங்களை எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

இவ்விதழை தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் ஒரு அஞ்சல் அட்டையில் உங்களது சரியான முகவரியுடன் உங்கள் பதிவு எண்ணைப் புதிப்பித்துக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் யாவருக்காகவும் ஜெபிக்கிறோம்.

இடம்:- வத்தலக்குண்டு, கிறிஸ்துவின் பணியில்

தேதி:- 9-12-97

### 1997

- இவ்வருடத்தில் நம்மைக்காத்த தேவனுக்கு நன்றி சொல்லி
- இவ்வருடத்தில் நம் ஜெபங்களைக் கேட்ட தேவனுக்கு நன்றி சொல்லி
- இவ்வருடத்தில் நல்ல மழையைக்கொடுத்த தேவனுக்கு நன்றி சொல்லி
- இவ்வருடத்தில் நம்மைக் குணப்படுத்திய தேவனுக்கு நன்றி சொல்லி
- இவ்வருடத்தில் புதிய ஆத்துமாக்களை சபையில் சேர்த்த தேவனுக்கு நன்றி சொல்லி
- இவ்வருடத்தில் புதிய வாசகர்களை ஏற்படுத்திய தேவனுக்கு நன்றி சொல்லி
- இவ்வருடத்தில் நம் தேவைகளைச் சந்தித்த தேவனுக்கு நன்றி சொல்லி

தேவன் காத்தார், கேட்டார், கொடுத்தார், குணப்படுத்தினார், சேர்த்தார், ஏற்படுத்தினார், சந்தித்தார்.

அவருக்கே துதி, கனம், மகிமை உண்டாவதாக! ஆமென்!

*Published by*

**WORLD LITERATURE PUBLICATIONS**

**POST BOX: 5**

**BATLAGUNDU-624 202.**

**INDIA.**

# கிறிஸ்துவின் வசனம்
## WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 6 டிசம்பர் 1997 கனி 5


ஆசிரியவுரை

## தம்மைத் தாமே தாழ்த்தினார்
## He humbled himself

நாம் பார்க்கிற இந்த வானத்தையும், பூமியையும் படைத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனிதனை மீட்க அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலாக இந்த உலகத்திற்கு வந்தார். உலக இரட்சகர் பெரிய அரண்மனையில் பிறப்பார் என்று ஜனங்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அவரோ ஒரு முன்னனையில் கிடத்தப்பட்டார். முப்பதாம் வயதில் ஞானஸ்நானம் பெற்று, ஒலிவ மலையில் தங்கிக் கொண்டும், படவுகளிலும், கழுதையின் மேலும், கால் நடையாகவும் சென்று ஜனங்களை சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் அளித்து, பிணியாளிகளை சுகமாக்கி நன்மை செய்கிறவராய் எங்கும் சுற்றித் திரிந்தார். அவரிடம் வந்த அனைவரும் நிறைவான ஆசீர்வாதத்தோடு திரும்பிச் சென்றனர். இவ்வருடத்தின் இறுதியில் இருக்கிற நாம் அவரை நோக்கிப் பார்ப்போம்.

"சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" என்று யோவா 1 : 3 ல் வாசிக்கின்றோம். நாம் பார்க்கிற அனைத்தும் அவர் மூலமாகவே உண்டாயிற்று. சகலத்தையும் படைத்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து அடிமையின் ரூபமெடுத்து மனுஷனைச் சந்திக்க மனுஷ சாயலாக வந்தார். "அவர் உலகத்திலிருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை" யோவா 1 : 10. இன்றும் அவரை அறியாது மனிதன் தனக்கென்று ஒரு கடவுளை உண்டாக்கி வணங்கி வருகிறான். ஏசு ஒரு மத போதகர் என்றே அநேகர் கருதுகின்றனர். அவர் ஒரு மத போதகராக இருந்திருப்பாரே என்றால் திருமணம் செய்திருப்பார், இப் பூமியில் தமக்கென்று ஒரு தலைமை அலுவலகத்தையும் ஏற்படுத்தி இருப்பார். ஆனால் அவர் ஒரு கன்னியின் வயிற்றில் பிறந்து ஏழ்மைக் கோலம் பூண்டு எல்லா மனிதரையும் நேசித்து அன்பு செலுத்தினார். ஒருவரையும் அவர் புறம்பே தள்ளவில்லை.

"மனுஷகுமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" மத் 20 : 28. இன்றைய நாட்களில் பல விதமான ஊழியங்களைப் பார்க்கின்றோம். எல்லாம் வேலை ஏவுகிற காரியமாக இருக்கிறது. ஊருக்குத்தான் உபதேசம், அது தனக்கல்ல என்று அநேக போதகர்கள் எழும்பி ஜனங்களை வேலை வாங்குவதைப் பார்க்க முடிகிறது. ஆண்டவர் அந்த விதமான ஊழியத்தை செய்யவில்லை. தம்மைத் தாமே வெறுமையாக்கி அநேகரை மீட்க தமது ஜீவனையே சிலுவையில் ஒப்புக்கொடுத்தார்.

எவன் பெரியவன் என்று சீசர்களுக்குள்ளே ஒருமுறை வாக்குவாதம் உண்டாயிற்று. அப்பொழுது ஆண்டவர் "உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக் கடவன். பந்தியிருக்கிறவனோ, பணிவிடை செய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப் போல் இருக்கிறேன்" என்றார் லூக் 22 : 26-27.

ஆம் பிரியமானவர்களே! அவர் தம்மை ஒரு பணிவிடைக் காரர் போல தாழ்த்தினார். அப்பத்தையும், திராட்ச ரசத்தையும் அவர்களுக்குப் பரிமாறினார், அவர்களுடைய கால்களை கழுவினார் என்றெல்லாம் நாம் வேதத்தில் வாசிக்கின்றோம். அவர் தலைவனாக இருந்தும் ஒரு பணிவிடைக்காரர் போல ஊழியம் செய்தார்.

ஆண்டவர் ஒரு குறிப்பிட்ட வருடங்களுக்கு மட்டும் தன்னைத் தாழ்த்தவில்லை. முடிவு பரியந்தமும் தாழ்த்தினார். "அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" பிலி 2 : 8. வாய்த்திறவாத ஆட்டைப் போல சிலுவைப்பாடுவரை ஒப்புக் கொடுத்தார். எதற்காக இத்தனைப் பாடுகள்? "அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குறிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்யப் பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்" என்று தீத் 2 : 14ல் வாசிக்கின்றோம். இப்படி தாழ்த்தி நம்மை பாவத்திலிருந்து மீட்டெடுத்த ஆண்டவருக்கு நாம் பக்தி வைராக்கியமுள்ளவர்களாக இருந்து நம்மையும் தாழ்த்துவோம்.

உங்களை மீட்கவந்த ஏசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்று தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறீர்களா? அப்படி இல்லையென்றால் இன்றே அவரை ஏற்றுக்கொண்டு தேவனுடைய பிள்ளையாக மாறுங்கள். "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசம் உள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்". யோவா 1 : 12. மேலும் "நாம் தேவனுடைய

பிள்ளைகளென்று அழைக்கப்படுவதனாலே பிதாவானார். நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை. பிரியமானவர்களே இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" 1 யோவா 3 : 1-2.

இவ்வளவு நிறைவான ஆசீர்வாதங்களைப் பெற்ற நாம் ஏன் கலங்கவேண்டும்? இவ்வருடத்தில் உங்கள் முயற்சி தோல்வியடைந்து விட்டதா? வருத்தப்பட வேண்டாம். "உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" பிலி 4 : 19. பயப்படாதிருங்கள். உங்களுக்கு உண்டானவைகள் போதும் என்று அவைகளை கர்த்தர் சமூகத்தில் வைத்து ஜெபியுங்கள். தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்ற வாக்கியத்தின்படி இயேசுவைப் போல் உங்களைத் தாழ்த்தி, கர்த்தருக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். அவர் உங்களை வழிநடத்துவார்.

"ஆண்டவர் இயேசு கிறிஸ்து தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபம் எடுத்து மனுஷர் சாயலானார்" பிலி 2 : 6-7. நாமும் அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்றும், குப்பையுமாக எண்ணி கிறிஸ்துவுக்காகவும், அவருடைய சரீரமாகிய சபைக்காகவும் வாழ்வோம். மற்ற மனிதர்களுக்கு முன்பாக நம்மை தாழ்த்தி அவர்களையும் இயேசு வண்டை அழைப்போமாக.

## இயேசு ஒருவரையும் புறம்பே தள்ளவில்லை
## யோவா 6 : 37

**புறம்பே தள்ளவில்லை**

| | |
|---|---|
| 1. விபச்சார ஸ்திரீயை | யோவான் 8 : 3-11 |
| 2. நூற்றுக்கு அதிபதியை | மத்தேயு 8 : 5-13 |
| 3. பெரும்பாடுள்ள ஸ்திரீயை | மத்தேயு 9 : 20-22 |
| 4. கானானிய ஸ்திரீயை | மத்தேயு 15 : 22-28 |
| 5. பத்து குஷ்டரோகிகளை | லூக்கா 17 : 12-19 |
| 6. அசுத்த ஆவியுள்ளவனை | மாற்கு 5 : 2-20 |
| 7. திமிர்வாதகாரனை | லூக்கா 5 : 18-25 |
| 8. ஆயக்காரனை | லூக்கா 5 : 27-32 |
| 9. மரித்த சிறுமியை | லூக்கா 8 : 49-56 |
| 10. ஐயாயிரம் பேருக்கு அதிகமானவர்களை | லூக்கா 9 : 12-17 |
| 11. கூனியாய் இருந்த ஸ்திரீயை | லூக்கா 13 : 11-13 |
| 12. ஐசுவரியவானனான தலைவனை | லூக்கா 19 : 1-10 |
| 13. காட்டிக்கொடுத்த யூதாஸை | மத்தேயு 26 : 49-50 |
| 14. மறுதலித்த பேதுருவை | யோவான் 21 : 15-19 |
| 15. சிலுவையில் தொங்கிய கள்ளனை | லூக்கா 23 : 42-43 |

# கிறிஸ்துவின் இரத்தம்
# The Blood of Christ

**J. C. CHOATE**

தேவனுடன் மனிதனுக்குள்ள உறவில் இரத்தம் எப்போதுமே ஒரு பங்கைப் பெற்று வந்துள்ளது. பழைய ஏற்பாடு காலத்தில் செலுத்திய மிருக பலிகள் இதை உண்மை எனக் காட்டுகின்றன. ஆனால் எபிரேய எழுத்தர் அறிவிப்பது போல, இந்தப் பலிகள் பாவத்தை நிரந்தரமாக எடுத்துப்போட முடியவில்லை; "அல்லாமலும் காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டாதே" (எபி 10:4). எனவே மிருகத்தின் இரத்தம் பாவத்தைப் போக்க இயலாதிருந்தால், மனிதன் இரட்சிப்படைவது எப்படி? கிறிஸ்துவின் இரத்தம் ஒரே ஒருமுறை சிந்தப்பட்டு, அதோடு தொடர்புகொள்ளவரும் பாவியின் சகல பாவங்களையும் முற்றிலுமாகக் கழுவிப்போடுவதாக புதிய ஏற்பாட்டில் நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே, இங்கேதான் நமது உண்மையான பாடம் தொடங்குகிறது.

மனிதன் பாவியாக இருப்பதால் தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ள இயலாது என்பதாக பவுல் சொல்லுகிறார்; "நாம் பாவிகளாய் இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்" (ரோமர் 5 : 8). நமது பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார் என 1 கொரிந்தியர் 15 : 3ம் வசனத்தில் அவர் கூறினார். அது சிலுவை மரணமாக இருந்தது (பிலிப் 2 : 8) இந்த மரணத்தின் மூலம் நமது பாவங்கள் மன்னிக்கப்படத் தக்கதாக, அவருடைய இரத்தம் சிந்தப்பட்டது. அந்த இரத்தத்தோடு நாம் எவ்வாறு தொடர்புகொள்கிறோம் என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. விசுவாசத்தின் வழியாக என்று பல மதங்களிலுமுள்ள மக்கள் கூறக்கூடும். நல்லது, விசுவாசத்திற்கு அவசியம் ஒரு பங்கு உண்டு. ஆனாலும் விசுவாசம் மட்டுமே போதுமானதல்ல. சுவி ஷேசத்தைப் படிக்கும்போது அவருக்கு நாம் கீழ்படிய வேண்டும் என்பதையும் கவனிக்கிறோம். (எபி 5 : 8, 9) வசனத்தின்படி நடக்கிறவர்களாக இருங்கள். (யாக் 1 : 22) அவருடைய கட்டளை களுக்குக் கீழ்படியுங்கள். (யோவான் 14 : 15). எனவே நாம் அவருக்குக் கீழ்படியும்போது, அவருடைய இரத்தத்தோடு தொடர்புகொள்கிறோம் என்பதை அனுமானிக்கிறோம். இப்போது நாம் என்ன செய்ய வேண்டுமென்று அவர் கட்டளையிட்டிருக்கிறார்? நாம் சில வசனங்களைக் கவனிப்போம்; உதாரணமாக, அவர் கூறினார் " விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவர் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16 : 16).

விசுவாசித்து திருமுழுக்குப் பெறும்போது ஒருவன் இரட்சிக்கப்படக்கூடும் எனக் கிறிஸ்து கூறியபடியால், இந்தக் கீழ்படிதலின் மூலம் கிறிஸ்துவின் இரத்தத்தைப் பெறுகிறான், எனவே அவன் பாவங்கள் நீங்கக் கழுவப்படுகிறான் என்று நாம் முடிவு செய்கிறோம். மீண்டுமாக, பாவிகளின் ஒரு கூட்டத்தில் பேசும்போது, பேதுரு சொன்னார் "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொரு வரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப் 2 : 38). பாவங்கள் மன்னிக்கப்பட ஒருவன் மனந்திரும்பி பின் திருமுழுக்குப்பெற வேண்டியது அவசியமென்றால், கிறிஸ்து தம்மைத் தாமே ஒரு முழுமையான பலியாக ஒப்புக்கொடுத்தபடியால், மனிதனின் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டி தமது இரத்தத்தை சிந்தியபடியால் இக்கட்டளைகளுக்குக் கீழ்படிவதின் மூலம் ஒருவன் கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பு கொள்ளுகிறான், அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்ற முடிவுக்கு நாம் மீண்டும் வருகிறோம். அடுத்து சவுலின் மனத்திரும் புதலைபற்றி, அந்தப் போதகர் வந்து கூறினார்: "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்பட...." (அப் 22 : 16). ஆனால், பாவங்களை திரு முழுக்கு எவ்வாறு கழுவுகிறது? தண்ணீருக்கு இங்கு முக்கியத்துவம் கிடையாது, ஆனால் கீழ்படிதலுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இப்படியாக ஒருவர் கர்த்தருக்குக் கீழ்படியும் போது கிறிஸ்துவின் இரத்தம் அவனுடைய பாவங்களைக் கழுவுகிறது. அது எளிதானது.

ரோமர் 6ம் அதிகாரம் 3-6 வசனங்களுக்கு நாம் திருப்பும் போது, பவுல் விளக்குகிறார்: "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞான ஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துக்கு உள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மறித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுட்னேகூட அடக்கம் பண்ணப் பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்திற்கு ஊழியம், செய்யாதபடிக்கு பாவ சரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனிதன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்."

" இப்போது, அவர் எதைச் சொல்லுகிறார்? நமது கீழ்படிதலால், நாம் கிறிஸ்துவின் மரணத்தை அடைகிறோம். அல்லது அவருடைய மரணத்தின் பலன்களை நாம் பற்றிக் கொள்ளக்கூடியவர்களாக இருக்கிறோம், என்பதை அவர் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதாவது, நாம் கிறிஸ்துவின் இரத்தத்தையும் பெற்றுக்கொள்கிறோம், அது நம்மைக் கழுவி பரிசுத்தமாகிறது. அவருடைய இரத்தத்தின் வழியாக நமக்கு மன்னிப்புக் கிடைக்கிறது என எபேசியர் 1:7ல் கூறுகிறார். நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக, அவருடைய இரத்தம் சிந்தப்பட்டதாக கிறிஸ்து தாமே மத்தேயு 26 : 28ஆம் வசனத்தில் கூறினார். அப். 2 : 38ஆம் வசனத்திலும் மாற்கு 16:16ம் கற்றுத்தறுவது போல, பாவங்கள் மன்னிக்கப்படுவதையும் இரட்சிப்பு அடைவதையும் மீண்டும் இந்த வசனங்கள் நமக்கு நினைப்பூட்டுகின்றன. எனவே, இந்தக் கட்டளைகளுக்கு கீழ்படியும் போது கிறிஸ்துவின் இரத்தத்தை நாம் அடைந்து, கழுவப்படுகிறோம். இதைத்தவிர வேறு எந்த வழியும் இல்லை.

✡ கிறிஸ்துவின் இரத்தத்தைப் பற்றி வேறு சில காரியங்களை நாம் கவனிப்போம்:

1. கிறிஸ்துவின் இரத்தத்தால் புதிய ஏற்பாடு முத்திரையிடப்பட்டது. (மத்தேயு 26 : 28).
2. யூதருக்கும் புற ஜாதியாருக்கும் குறுக்கே நின்ற சுவரை கிறிஸ்துவின் இரத்தம் தகர்த்தது. (எபே. 2 : 13, 14)
3. அவருடைய இரத்தத்தால் நாம் நீதிமான்களாக்கப்பட்டோம். (ரோமர் 5 : 9)
4. அவருடைய இரத்தத்தின் வழியாக மீட்பு உள்ளது. (கொலோ. 1 : 14).
5. அவருடைய இரத்தத்தால் சபை கிரையம் கொள்ளப்பட்டது. (அப். 20 : 28).
6. அவருடைய சிலுவை இரத்தத்தின் மூலம் சமாதானம் வருகிறது. (1 கொலோ. 1 : 20).
7. கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தத்தால் பாவிகள் மீட்கப் படுகின்றனர். (பேதுரு 1 : 18, 19).
8. சகல பாவங்களிலிருந்தும் கிறிஸ்துவின் இரத்தம் கழுவிப்போடுகிறது. (1 யோவான் 1 : 7).
9. அவருடைய சொந்த இரத்தத்தால், நமது பாவங்களிலிருந்து நாம் கழுவப்படுகிறோம். (வெளி. 1 : 5)
10. ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்திலே அங்கிகள் தோய்த்து வெளுக்கப்பட்டிருக்கின்றனர். (வெளி. 7 : 14)
11. கர்த்தரின் பந்தியில் பங்குபெறும்போது, நாம் கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவுகூறுகிறோம். (மத். 26 : 26-28).

கிறிஸ்துவின் இரத்தம் உங்களுக்கு எந்தவகையில் சம்பந்தமுள்ளது? அதோடு தொடர்பு கொள்ள நீங்கள் கர்த்தருக்குக் கீழ்படிந்திருக் கிறீர்களா? இல்லையென்றால், நீங்கள் இன்னும் உங்கள் பாவத் திலேதான் வாழ்கின்றீர்கள். ஆனால் கர்த்தரின் கட்டளைகளுக்கு நீங்கள் கீழ்படிந்தால், அதோடு தொடர்பு கொள்வதின் விளைவாக இரட்சிக்கப்படுவீர்கள். பின்னர் கிறிஸ்துவின் இரத்தத்தால் கிரையங் கொள்ளப்பட்ட சபையில் சேர்த்துக்கொள்ளப்படுவீர்கள். பின்னர் ஒரு கிறிஸ்தவனாக, வாரம் தோறும் கர்த்தரின் பந்தியில் பங்கு பெற்று அவருடைய இரத்தத்தை நீங்கள் நினைவுகூர்ந்தால், அவர் ஒளியில் இருப்பது போல நீங்களும் வெளிச்சத்தில் நடப்பீர்கள்; பின் இயேசு கிறிஸ்துவின் இரத்தம், சகல பாவங் களிலிருந்தும் உங்களைக் கழுவி, நித்திய ஜீவன் என்ற உங்களின் இறுதிப் பரிசுக்காக உங்களைப் பாதுகாத்துக்கொள்ளும். உண்மையிலேயே இரத்தத்தில் வல்லமை உள்ளது.

Translated by S. S. Rajan

## ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்

நவம்பர் மாத இதழின் வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்:

1. S. பாலசுப்பிரமணி, - காங்கேயம்
2. J. ஜோசுவா ஜெபராஜ் - மதுரை
3. N. தானியேல் தமிழ்வாணன் - மேல்விசாரம்
4. S. எஸ்தர்ராணி - தூத்துக்குடி
5. S. ரேச்சல் அமுதமணி - மேல்விசாரம்
6. J. மேரி எலிசபெத் கலைவாணி - வத்தலக்குண்டு

நவம்பர் மாத இதழின் விடைகள்:

1. சிம்சோன் நியா 15 : 19
2. யோபு யோபு 13 : 4
3. முறிந்துபோம் நீதி 15 : 13
4. ஜென்மசுபாவமான 1 கொரி 2 : 14
5. கட்டப்பட்டிருக்கும் மத் 18 : 18
6. மனுஷனுடைய
7. தேவதூதரை
8. ஆவியானவர்
9. இயேசு கிறிஸ்து
10. கர்த்தராகிய ஆண்டவர்

நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள். யோவா 14 : 15

பெண்கள் பகுதி

## தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தைத் தெரிந்துகொள்
## Choose affliction with the people of God

அன்பான சகோதரிகளே, ஆசீர்வாதமான செய்திகளையே கேட்டுக்கேட்டுப் பழகிப்போன நமது காதுகளுக்கு இச்செய்தி வியப்பையும், ஏன் வியாகுலத்தையும்கூடத் தரலாம். கிறிஸ்தவ ஜீவியம் என்பது ஒரு மேலோட்டமான ஆசீர்வாதங்கள் மட்டும் நிறைந்த ஒரு ஜீவியமல்ல. இயேசுவோடுகூட பாடுபடுவோமேயானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம் என வேதம் சொல்லுகிறது. இந்த மேலான ஆசீர்வாதத்தை வாஞ்சிக்கிற நாம் துன்பத்தை அனுபவிப்பதையும் தெரிந்துகொள்வது அவசியமே.

"விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோசங்களை அனுபவிப்பதை பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து எகிப்திலுள்ள பொக்கிசங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்" (எபி 11 : 24-26) பாருங்கள்! இந்த மோசே தனக்கு இருந்த அரண்மனை வாழ்வை, சொகுஷான ஆடம்பரக் காரியங்களை அநித்தியமான பாவ சந்தோஷங்கள் எனக்கூறி, அதை அனுபவமிக்க மனமில்லாமல் தேவ ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதைத் தெரிந்துகொண்டான். ஆனால் இன்றைய கிறிஸ்தவர்களோ, தேவ ஜனங்களோடே ஐக்கியம் வைக்கப் பயந்து கொண்டு, நித்திய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிகளைத் தெரிந்துகொள்ளாமல், இந்த உலக ஆசீர்வாதங்களே போதுமென்று பாவ சந்தோஷங்களைத் தெரிந்து கொள்கின்றனர். இம்மைக்குரிய ஆசீர்வாதங்களுக்காக சில சமயங்களில் கிறிஸ்துவையே மறுதலித்துவிடுவதும் உண்டு.

அன்பான சகோதரிகளே, "தேவ பக்தியாய் நடக்க மனதாய் இருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்று II தீமோத் 3 : 12ல் கூறப்பட்டுள்ளது. ஆம் கிறிஸ்துவை உண்மையாய் பின்பற்ற விரும்புகிற நாம் அவமானம், நிந்தை, நஷ்டம் போன்ற அநேகப் பாடுகளினூடே சென்று துன்பப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களும் கூட அனேக உபத்திரவங்கள் மத்தியிலும் தேவனைத் துதித்துப் பாடினார்கள். கிறிஸ்துவின்மேல் கொண்டிருந்த அவர்களது வைராக்கியம் அநேகரை கிறிஸ்தவர்களாக மாற்றினது. ஒருவேளை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு உலகத்துக்கு ஒத்த வேஷம் தரித்துக் கொள்வோமேயானால் நிச்சயமாக உலக ஆசீர்வாதங்களை சம்பூரணமாய்ப் பெறக்கூடும். அது பூமிக்குரிய அநித்தியமான பாவ சந்தோஷமே.

நாம் உண்மையிலேயே கிறிஸ்துவுடனேகூட எழுந்ததுண்டானால் கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுவோம். 'பூமியிலுள்ளவைகளையல்ல மேலானவைகளையே நாடுங்கள்' (கொலோ 3 : 2). கிறிஸ்துவைப் பின்பற்றுவதில் வெட்கப்படாமல் இருப்போம். 'ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது' (பிலி 1:29)

இப்படியிருக்க சகோதரிகளே, கர்த்தருக்கேற்ற காரியங்களில் வளருவோம். உண்மையான இருதயத்தோடு தேவ ஜனங்களோடே ஐக்கியப்பட்டு கிறிஸ்துவினிமித்தம் நாம் எல்லோராலும் தள்ளப்படுதலும் துன்பத்தைத் தெரிந்துகொண்டு இனிவரும் பலன் மேல் நோக்கமாய் இருப்போமாக!

J. குணேசிராஜாமணி

## இம்மாத வேத அறிவுப் போட்டி

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும் கடை ஐந்திற்கு வேதத்திலிருந்து விடை மட்டும் எழுதி இம்மாதம் முப்பதாம் தேதிக்குள் அனுப்பிவைக்கவும்.

1. தன் வாயையும், தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்மாவை எவைகளுக்கு விலக்கிக் காக்கிறான்?
2. பவுலுக்கும், சீலாவுக்கும் ஜாமீன் ஏற்றவன் யார்? அவன் எந்த பட்டணத்தை சேர்ந்தவன்?
3. பலவீனமுள்ள சகோதரருக்கு விரோதமாய் பாவஞ்செய்கிறவன் யாருக்கு விரோதமாய் பாவஞ் செய்கிறான்?
4. உங்கள் வாயில் பிறக்கலாகாத வார்த்தைகள் எவை?
5. நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாய் இருப்பேன் என்றது யார்?
6. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒருவரையும் புறம்பே தள்ளவில்லை. ஆனால் ஒருவனை அப்பாலே போ என்றார் அவன் யார்?
7. எதையும் எதையும் சிநேகியுங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்?
8. மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தியவர் யார்?
9. நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோமா?
10. பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் எப்படியிருக்கிறான்?

கர்த்தருடைய செய்கைகள் பெரியவைகளும், அவைகளில் பிரியப்படுகிற எல்லாராலும் ஆராயப்படுகிறவைகளுமாயிருக்கிறது. (சங்கீதம் 111 : 2)

**Monthly Magazine**
Regd. No. 84661 - 92.
Postal Regn. No. TN/DDL/19

Edited by B. Arjunan on behalf of Church of Christ 2-2-102-D/5/ Rajan Nagar, Batlagundu and Printed at Bharathi Computer Offset for Shanthi Printers Batlagundu - 624202.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கின்றோம்.

ஆராதனை நேரம்:
ஞாயிறு காலை 9-00 மணி
வேத வகுப்பு நேரம்:
வியாழன் மாலை 6-45 மணி

கிறிஸ்துவின் சபை
2-2-102-D/5, ராஜன் நகர்,
வத்தலக்குண்டு - 624202.
திண்டுக்கல் மாவட்டம்.
Phone (04543) 23278

To

From
WORD OF CHRIST
Post Box No. 5
BATLAGUNDU - 624 202.
S. India.